Ph : 04175 - 236654 | 235295

# SHANMUGA INDUSTRIES ARTS & SCIENCE COLLEGE (Co-Ed)

Certified Under Section 2(f) & 12B of UGC Act 1956, An ISO 9001 - 2015 Certified Institution
Permanently Affiliated to Thiruvalluvar University, Vellore and Approved by the Govt. of Tamil nadu & AICTE, NewDelhi
Manalurpet Road, Tiruvannamalai - 606 603, E-Mail : shanmugacollege@gmail.com, Website : www.shanmugacollege.edu.in

01.08.18

## தி.மலை சண்முகா கல்லூரியில் டெங்கு விழிப்புணர்வு ஒரு நாள் புத்தாக்கப் பயிற்சி திருவள்ளுவர் பல்கலைக்கழகத் துணை வேந்தர் முனைவர் க.முருகன் கருத்துரை

திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தின் நாட்டுநலப் பணித்திட்டமும், திருவண்ணாமலை சண்முகா தொழிற்சாலை கலை அறிவியல் கல்லூரியின் நாட்டுநலப் பணித்திட்டமும் இணைந்து டெங்கு விழிப்புணர்வு தொடர்பான ஒரு நாள் புத்தாக்கப் பயிற்சி நடத்தியது. இப்புத்தாக்கப் பயிற்சியில் திருவள்ளுவர் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் **க.முருகன்** கலந்து கொண்டு கருத்துரை வழங்கினார். **"விழிப்புடன் இருப்போம் டெங்குவை ஒழிப்போம்"** என டெங்குக் காய்ச்சல் பரவும் விதம் குறித்தும், கொசுக்கள் உற்பத்தியாகும் இடங்கள் குறித்தும், கொசுக்களின் வகைகளைப் பற்றியும் எடுத்துரைத்தார். நல்ல நீரில் உற்பத்தியாகும் இக்கொசுக்களைக் கட்டுப்படுத்த இயற்கையாகவே நம்மிடத்தில் உள்ள வேம்பு, கற்றாழை, துளசி உள்ளிட்ட மூலிகைச் செடிகளும், மலைகளும், காடுகளும், பாறைகளும் பயனுள்ள வகையில் உள்ளன. அதனை முறையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் உடலுக்கு ஒவ்வாமைத் தருகின்ற கொசுவர்த்திகளை பெரும்பாலும் தவிர்க்க வேண்டுமென்றும் கேட்டுகொண்டார். குறிப்பாக வேம்பு நமக்கு கிடைத்திருக்கின்ற கற்பக மரமாக உள்ளது. கிருமி நாசினி உடலின் பெரும்பாலான நோயினைப் போக்கக் கூடிய ஆற்றலுடையது என்றும் எடுத்துரைத்தார்.

இந்நிகழ்ச்சிக்கு திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் (பொ) முனைவர் **வெ.பெருவழுதி** தலைமையுரையாற்றினார். திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தின் நாட்டுநலப் பணித்திட்ட ஒருங்கிணைப்பாளரும் தமிழ்த்துறை இணைப் பேராசிரியருமான முனைவர் **ம.செந்தில்குமார்** விழிப்புணர்வு அறிமுக உரையை நிகழ்த்தினர். கல்லூரியின் தலைவர் **எம்.என்.பழனி** முன்னிலை வகித்தார். செயலர் மற்றும் தாளாளர் **என்.குமார்**, கல்விப்புல முதன்மையர் பேரா.**அழ.உடையப்பன்** உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினார். பொருளாளர் **கோ.இராஜேந்திரகுமார்** நன்றியுரையாற்றினார். துணைத்தலைவர் **ஜி.புல்லையா**, முன்னாள் தலைவர் **பி.இராமச்சந்திர உபாத்தியாயா** உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். முன்னதாக கல்லூரியின் முதல்வர் முனைவர் **கே.ஆனந்தராஜ்** வரவேற்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியினைத் தமிழ்த்துறைத்தலைவர் **இரா.சங்கர்** தொகுத்து வழங்கினார். இதற்கான ஏற்பாட்டினை நாட்டுநலப் பணித்திட்ட அலுவலர்கள் பேரா.**த.அருண்குமார்**, பேரா.**ம.பன்னீர்செல்வன்** மற்றும் நாட்டுநலப்பணித்திட்ட மாணவர்கள் உள்ளிட்டோர் செய்திருந்தனர்.

டெங்கு விழிப்புணர்வு மற்றும் ஒருநாள் புத்தாக்கப் பயிற்சியாக நடத்தப்பட்ட இந்நிகழ்ச்சியில் கல்லூரி மாணவ, மாணவியர் திரளாகக் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர்.

**தாளாளர்**


THIRUVALLUVAR UNIVERSITY
SHANMUGA INDUSTRIES ARTS & SCIENCE COLLEGE
NATIONAL SERVICE SCHEME (NSS)
NSS ONE DAY ORIENTATION & DENGUE AWARENESS PROGRA